தி/ள். பாடியா டிம்பர் கம்பெனி பிரைவேட் லிமிடெட்

–எதிர்–

விசாகப்பட்டினம் துறைமுக பொறுப்புரிமை அமைப்பின் பொறுப்பு உரிமையர் குழு அதன் செயலாளர் மூலமாக

(உரிமையியல் மேல்முறையீட்டு எண் 7469/2008)

தேதி: 05.01.2021

முன்னிலை :

மாண்புமிகு நீதியரசர் திரு. நவீன் சின்ஹா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. இந்திரா பேனர்ஜி, ஜே ஜே.

ஒப்பந்தம் – முனைவு மற்றும் முனைவை ஏற்றுக்கொள்ளுதல் – ஒரு நிபந்தனையுடன் கூடிய முனைவை மேலும் சில நிபந்தனைகளுடன் ஏற்றுக்கொள்ளுதல் ஒப்பந்தம் முடிவடைந்ததாக கருத இயலுமா. முனைவை ஏற்றுக்கொள்பவர் புதியதாக முனைவை கொடுப்பவரால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் நிபந்தனைகளுடன் கூடிய முனைவை மேலும் சில நிபந்தனைகளுடன் ஒப்புக்கொண்டாலும் அந்த ஒப்பந்தம் முடிவடைந்ததாக கருத இயலுமா – முடிவு : முனைவும் – முனைவை ஒப்புக்கொள்வதும் முழுமையாக இருக்க வேண்டுமென்று தான் ஒப்பந்தச் சட்டத்தின் அடிப்படை கோட்பாடு என்றும் முன் மொழிந்தவர் ஏற்கனவே ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு பிறகு ஏற்றுக்கொள்பவர் புதியதாக ஒரு நிபந்தனையை ஒப்பந்தத்தை ஏற்கும்போது விதித்தால் ஒப்பந்தத்தை முன் மொழிந்தவர் அந்த நிபந்தனையை ஏற்காத வரையில் ஒப்பந்தம் முழுமையடையாது – புதியதாக விதித்த நிபந்தனையை சற்று

மாறுதலுடன் ஒப்புக்கொள்வது ஒப்பந்தத்தை ஏற்றதாக ஆகாது – அதன் விளைவு மற்றும் பொருளானது முன் மொழிந்தவர் எதிர் முன் மொழிதலை முழுமையாக ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு முன்பாகவே ஏற்று கொண்டிருக்க வேண்டும் – ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 7–ஐ உயர்நீதிமன்றம் கவனிக்கவில்லை – கீழமை நீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் விடுத்த ஒப்பந்தப் புள்ளியின் பிரதான சங்கதியை பொருட்படுத்தவில்லை என்றும், மேல்முறையீட்டாளர் தனது முனைவாக மேல்முறையீட்டாளரின் டெப்போவில் ஆய்வு மேற்கொள்ளப்படும் என்று நிபந்தனையுடன் கூடிய முனைவை தான் சமர்பித்துள்ளார் என்றும் – மேற்படி நிபந்தனையை எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் நிபந்தனை விதிக்காமல் ஏற்றுக்கொள்ளவில்லை – எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் மேல்முறையீட்டாளரின் டெப்போவில் ஆய்வு மேற்கொள்ள எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையரின் அறையில் சரக்கை ஆய்வு செய்ய வேண்டுமென மேலும் ஒரு நிபந்தனை விதித்து தான் மேல்முறையீட்டாளரின் டெப்போவில் சரக்குகளை ஆய்வு செய்ய எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் குழு ஒப்புக்கொண்டுள்ளது – அந்த நிபந்தனையை மேல்முறையீட்டாளர் ஒப்புக்கொள்ள இயலாது, எனவே ஒப்பந்தம் முழுமையாக முடிவடைந்ததாகவோ மீறியதாக கேள்வி எழுப்பவோ, இழப்பீடு கோரவோ மேல்முறையீட்டாளரின் செலவில் ஆபத்து கொள்முதல் எடுத்ததாகவோ ஏற்க இயலாது – ஒப்பந்தச் சட்டம் 1872 – பிரிவு 7.

மேல்முறையீடு இந்த நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது

தீர்வு : 1.1. ஒப்பந்தச் சட்டத்தின் அடிப்படை கோட்பாடானது முனைவும், முனைவை ஏற்றுக்கொள்வதும் முழுமையானதாக இருக்க வேண்டும். அதில் எந்த சந்தேகத்திற்கும் இடம் இருக்கக் கூடாது. முனைவும் ஏற்றுக்கொள்ளுதலும் மூன்று கூறுகளை கொண்டதாக இருக்க வேண்டும். அவை உறுதி, அர்பணிப்பு மற்றும் தகவல் தொடர்பு. தெறிப்புத்தருநர் ஒப்பந்தத்தில் ஏற்கனவே

கையொப்பமிட்டு ஒப்பந்தத்தை ஏற்கும்போது ஏற்கும் நபர் புதிய நிபந்தனை விதித்தால் அந்த நிபந்தனையை தெறிப்புத்தருநர் ஏற்கும் வரையிலும் ஒப்பந்தம் முழுமையடையாது. மாறுபாட்டுடன் கூடிய தெறிப்புத் தருதல் என்பது தெறிப்புத் தருதல் ஆகாது. அதன் விளைவு மற்றும் பொருளானது எதிர் முன் மொழிந்தவர் முன் மொழிதலை முழுமையாக ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு முன்பாகவே ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும் [பத்தி 56] [247 – B – C].

1.2. உயர்நீதிமன்றம் ஒப்பந்தச் சட்டம் 1872–ன் பிரிவு 7–ஐ பொருட்படுத்தவில்லை. கீழமை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் மேற்படி முக்கிய சங்கதியை பொருட்படுத்தவில்லை. எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் குழு விடுத்த ஒப்பந்தப்புள்ளிக்கு மேல்முறையீட்டாளர் தனது டெப்போவில் சரக்குகளை ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென நிபந்தனை விதித்து முனைவு கொடுத்துள்ளார். மேற்படி நிபந்தனையை எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் குழு முழுமையாக ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் குழு அதன் அறையில் சரக்குகளை இறுதியாக ஆய்வுக்கு உட்படுத்த வேண்டுமென்று நிபந்தனையுடன் ஒப்புக்கொண்டுள்ளது. அந்த நிபந்தனையை மேல்முறையீட்டாளர் ஒப்புக்கொள்ளவில்லை. எனவே ஒப்பந்தம் முழுமையடைந்ததாக கூற இயலாது. முழுமையடையாத ஒப்பந்தம் என்பதால் அதில் விதி மீறலோ மேல்முறையீட்டாளரின் செலவில் ஆபத்து கொள்முதல் குறித்தோ கேள்வி எழ இயலாது. மேல்முறையீட்டாளரின் வைப்பு நிதியானது அவருக்கு திரும்ப கொடுக்கப்பட வேண்டும். [பத்தி 59] [247 – F – H., 248 – A – B].

ஹரித்வார் சிங் எதிர் பகுன் சும்புருயி மற்றும் பலர். எ.ஐ.ஆர். 1972 எஸ்.சி. 1242 மற்றும் யூனியன் ஆப் இந்தியா எதிர் பீம்சென் வளையாட்டி ராம் (1969) 3 எஸ்.சி.சி. 146: [1970] 2 எஸ்.சி.ஆர். 594 – அடிப்படையில்.

மகேஷ் டிரான்ஸ்போர்ட் கோ எதிர் டீ மற்றும் டி தொழிலாளர்கள் யூனியன், எ.ஐ.ஆர். 1974 எஸ்.சி. 868 மற்றும் எம்.வி. சங்கர் பட் மற்றும் ஒருவர் எதிர் க்ளவுட் பின்டோ (டி) அவரது வாரிசுகள் மற்றும் பலர் ., (2003) 4 எஸ்.சி.சி 86: [2003] 1 எஸ்.சி.ஆர். 1212 – இவ்வழக்கிற்கு பொருந்தாது.

ராஜஸ்தான் மாநில மின்சார வாரியம் மற்றும் பலர் எதிர் தயாள் வுட் வொர்க்ஸ் எ.ஐ.ஆர். 1998 AP 381; ஃபட்டே சந்த் எதிர் பால்கிஷன் தாஸ் எ.ஐ.ஆர். 1963 எஸ்.சி. 1405; [1964] 1 எஸ்.சி.ஆர். 515., ஜி.எம்.டீ.எ.பி. கூட்டுறவு Mkts. லிமிடெட் –எதிர்– துணைபதிவாளர் கூட்டுறவு சங்கங்கள், ராய்ச்சூர் எ.ஐ.ஆர். 1998 கர்நாடகா 354., மாரிமுத்து கவுண்டர் எதிர் ராமசாமி கவுண்டர் மற்றும் பலர் எ.ஐ.ஆர். 1979 மெட்ராஸ் 189., எ.கே.எ.எஸ். ஜமால் எதிர் மூலா தாவூத் சன்ஸ் & கோ எ.ஐ.ஆர். 1975 அரசப்பேரவை (Privy Council) 48; எம் / எஸ். சரயா டிஸ்டிலரி, சர்தார்பக்கர் எதிர் யூனியன் ஆப் இந்தியா மற்றும் ஒருவர் எ.ஐ.ஆர். 1984 டெல்லி 360; முரளிதர் சிரன்ஜிலால் எதிர் எம்/எஸ். ஹரிஷ்சந்தரா துவாரகாதாஸ் மற்றும் ஒருவர் எ.ஐ.ஆர். 1962 எஸ்.சி. 366: [1962] 1 எஸ்.சி.ஆர். 653; மஹாராஷ்டிரா மாநிலம் மற்றும் ஒருவர் எதிர் திகம்பர் பால்வன்ட் குல்கர்னி எ.ஐ.ஆர். 1979 எஸ்.சி. 1339: [1979] 3 எஸ்.சி.ஆர். 188; விசாகப்பட்டினம் துறைமுகம் பொறுப்பு உரிமையர் குழு, விசாகப்பட்டினம் மற்றும் ஒருவர் எதிர் பீகார் அல்லாய் ஸ்டீல்ஸ் லிமிடெட் மற்றும் பலர் 1991 (1) எ.எல்.டீ. 582; ரகுநாதன் ரெட்டி எதிர் ஹைதராபாத் அரசாங்க வருவாய்த்துறை செயலாளர் எ.ஐ.ஆர். 1963 எ.பி. 110; ஜவஹர்லால் பர்மான் எதிர் யூனியன் ஆப் இந்தியா எ.ஐ.ஆர். 1962 எஸ்.சி. 378; [1962] எஸ்.சி.ஆர். 769; யு.பி. ராஜ்கியா நிர்மான் நிகாம் லிமிடெட் எதிர் இந்தூர் பிரைவேட் லிமிடெட் மற்றும் பலர் எ.ஐ.ஆர். 1996 எஸ்.சி. 1373: [1996] 2 எஸ்.சி.ஆர். 386 – குறிப்பிடப்பட்டது.

வழக்கு சட்ட குறிப்பு

[1964] 1 எஸ்.சி.ஆர். 515	குறிப்பு	பத்தி 35
[1962] 1 எஸ்.சி.ஆர். 653	குறிப்பு	பத்தி 35
[1979] 3 எஸ்.சி.ஆர். 188	குறிப்பு	பத்தி 35
எ.ஐ.ஆர். 1964 எஸ்.சி. 868	குறிப்பு	பத்தி 46
[2003] 1 எஸ்.சி.ஆர். 1212	குறிப்பு	பத்தி 46
[1962] எஸ்.சி.ஆர். 769	குறிப்பு	பத்தி 46
[1996] 2 எஸ்.சி.ஆர். 386	குறிப்பு	பத்தி 46
எ.ஐ.ஆர். 1972 எஸ்.சி. 1242	குறிப்பு	பத்தி 56
[1970] 2 எஸ்.சி.ஆர். 594	குறிப்பு	பத்தி 57

உரிமையியல் மேல்முறையீடு அதிகார வரம்பு : உரிமையியல் மேல்முறையீடு எண் 7469/2008.

ஹைதராபாத்தில் உள்ள ஆந்திரபிரதேச உயிர்நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு வழக்கு எண் 2196 மற்றும் 2197/2000-ல் பிறப்பிக்கப்பட்ட 10.10.2006 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவின் பேரில்.

கைலாஷ் வாசுதேவ் மூத்த வழக்கறிஞர் தேவாஷிஸ் பரூக்கா, ஜஸ்டின் ஜார்ஜ், தி/ள். சவ்ஸ்ரீ, ரவி பரூக்கா, கோபால் சிங், மனிஷ்குமார், ஸ்ரீகாந்த்.எஸ்., தரப்பினர்களின் வழக்கறிஞர்கள்.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் திரு. இந்திரா பேனர்ஜி அவர்களால் வழங்கப்பட்டது.

1. இம்மேல்முறையீட்டில் எழுந்துள்ள சிறு கேள்வியானது நிபந்தனையுடன் கூடிய முனைவை மேலும் சில நிபந்தனைகளுடன் ஒப்புக்கொள்வது ஒப்பந்தம் முடிவடைந்ததாக ஏற்க இயலுமா. ஏற்பவர் முனைபவர் விதித்த மேலும் சில நிபந்தனைகளை ஏற்றாலும் ஏற்காவிட்டாலும் நிபந்தனைகளுடன் கூடிய முனைவை மேலும் சில நிபந்தனைகளுடன் ஒப்புக்கொள்வது ஒப்பந்தத்தை முடிவடைந்ததாக கருத இயலுமா என்பதே. மேற்படி கேள்வி குறித்து உயர் நீதிமன்றமோ, கீழமை நீதிமன்றமோ முடிவு செய்ததாக தெரியவரவில்லை.

2. மேல்முறையீட்டாளர் வைப்புத் தொகையை திரும்ப கேட்டு தாக்கல் செய்து அசல் வழக்கு எண் 450/1994–ஐ தள்ளுபடி செய்தும் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் இழப்பீடு கேட்டு தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 106/93–ஐ அனுமதித்தும் விசாகப்பட்டினம் கூடுதல் மூத்த உரிமையியல் நீதிபதி 31.03.2000 தேதியன்று வழங்கிய தீர்ப்புரை மற்றும் உத்தரவின் பேரிலான மேல்முறையீட்டு வழக்குகள் எண் 2196 மற்றும் 2197/2000–ல் 10.10.2006 தேதியன்று ஹைதராபாத் உயர்நீதிமன்றம் பொதுவான தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மூலம் உறுதி செய்ததை எதிர்த்து இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 17.07.1990 அன்றோ அல்லது அன்றைய தேதியிலோ எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் மர ஸ்லீப்பர்களுக்காக ஒப்பந்தத்தை விடுத்துள்ளனர். 01.08.1990 தேதியன்று அந்த ஒப்பந்தம் திறக்கப்படயிருந்தன.

4. அந்த ஒப்பந்தத்தின் 15 மற்றும் 16 உட்கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:–

"15. பொருட்களை வாங்குபவர் போக்குவரத்து காப்பீட்டிற்காக தனியாக தொகை செலுத்தமாட்டார் என்றும், ஒப்பந்த சரக்குகள்

சேர்க்க வேண்டிய இடத்தில் நல்ல நிலையில் வந்து சேரும் வரையிலும் பொருட்களை கொடுப்பவர் தான் பொறுப்பேற்க வேண்டும் எனவும் சரக்கு பெறுபவர் சரக்குகள் வந்து சேர்ந்ததிலிருந்து 30 நாட்களுக்கு மிகாமல் போக்குவரத்தின்போது சரக்கிற்கு இழப்போ, சேதமோ ஏற்பட்டிருந்தால் அதை சரக்குகளை கொடுப்பவருக்கு தெரியப்படுத்துவார்.

16. அவ்வாறு கொடுக்கப்பட்ட சரக்குகளில் ஏதேனும் குறைபாடு இருந்தால் அவற்றை நிராகரித்துவிட்டு சரக்கை கொடுத்தவரிடமே அதை திருப்பிக் கொடுத்து துறைமுகத்தின் மூலம் சரக்குகளை மீட்டெடுக்கவும் உண்டான உரிமையை துறைமுகம் தக்க வைத்துக்கொள்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது."

5. மேற்படி ஒப்பந்தத்திற்கு இணங்க மேல்முறையீட்டாளர் 01.08.1990 அன்றோ அல்லது அந்த தேதியிலோ ஒரு முனைவை சமர்பித்துள்ளார். அதில் மேல்முறையீட்டாளரின் டெப்போவில் வைத்து தான் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் கேட்டுக்கொண்டபடி ஸ்லீப்பர்களை ஆய்வு செய்ய வேண்டுமென குறிப்பிட்ட நிபந்தனையை மேல்முறையீட்டாளர் விதித்துள்ளார். மேல்முறையீட்டாளர் ஒப்பந்தத்தின் 15 மற்றும் 16 உட்கூறுகளை ஒப்புப்கொள்ளாமல் அதற்கு எதிராக எதிர் முன் மொழிதலை முன் வைத்துள்ளார். ஒப்பந்தத்தின் விதிமுறை மற்றும் நிபந்தனைகளின்படி மேல்முறையீட்டாளர் ரூ.75,000/–த்தை தன்னுடைய மேற்கோளுடன் சேர்த்து வைப்பீடு செய்துள்ளார்.

6. 02.08.1990 அன்றோ அல்லது அந்த சமயத்திலோ எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையரின் கடைகளின் கட்டுப்பாட்டாளர் ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தமானது 08.08.1990 தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டதாக தகவல் தெரிவித்துள்ளார்.

7. 08.08.1990 அன்று மேல்முறையீட்டாளர் தன்னுடைய திருத்தப்பட்ட மேற்கோளை சமர்ப்பித்து சரக்குகளை எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் தன்னுடைய டெப்போவில் வைத்து தான் ஆய்வு செய்ய வேண்டுமென்று நிபந்தனையை மீண்டும் வலியுறுத்தி சமர்பித்துள்ளார். ஒப்பந்தம் திறக்கப்பட்ட பிறகு மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் ஒப்பந்த குழுவிற்கும் இடையே சில ஆலோசனைகள் நடந்துள்ளது.

8. 11.10.1990 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையருக்கு மரத்தாலான ஸ்லீப்பர்களை வழங்க கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் ஒப்புக்கொண்டுள்ளார். மேல்முறையீட்டாளர் மீண்டும் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் சரக்குகளை மேல்முறையீட்டாளரின் விசாகப்பட்டினத்தில் உள்ள மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான வெப்பகுண்டா தொழிற்சாலைத் தளத்தில் வைத்து ஆய்வு செய்ய வேண்டுமென்றும் அவ்வாறு செய்தால் நிராகரிக்கப்பட்ட சரக்குகளை மேல்முறையீட்டாளரின் டெப்போவிற்கு அனுப்புவதற்கான போக்குவரத்து செலவு தனக்கு குறையும் என்பதன் பேரில் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

9. மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையரின் தொழிற்சாலைத் தளத்தில் வைத்து சரக்குகளை ஆய்வு செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் கருதினால் அதற்கு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள தொகையை விட 25 % கூடுதல் தொகை செலுத்த வேண்டுமென மேற்முறையீட்டாளர் கூறியுள்ளார். மேல்முறையீட்டாளரின் கடிதத்தில் குறிப்பிட்ட வாசகம் கீழ்கண்டவாறு :–

1. " நாங்கள் எஃப்.டி.ஆர் வி.பி.டீ. தளத்திற்கு தங்களுடைய சொந்த செலவில் பி.ஜி. டிராக் இந்தியன் சேல் மர ஸ்லீப்பர்களை **அளிக்க**

ஒப்புக்கொள்வதாகவும்,

2. ஆய்வு குறித்த உட்கூறுகளைப் பொறுத்து தங்களுடைய விசாகப்பட்டினத்தில் உள்ள வெப்பகுண்டா தொழிற்சாலைத் தளத்தில் வைத்து பொருளை ஆய்வு செய்துகொள்ளலாம் என்றும் அவ்வாறு செய்தால் நிராகரிக்கப்பட்ட பொருட்களை தங்களுடைய டெப்போவிற்கு கூடுதல் செலவாகாமல் எடுத்துச் செல்ல வசதியாக இருக்கும் என்றும், அவ்வாறு இல்லாமல் தங்களுடைய தளத்தில் வைத்து ஆய்வு செய்ய விரும்பினால் ஒப்பந்தப் பணத்தைவிட 25% கூடுதலாக கட்டணம் செலுத்த வேண்டும்.

3. 10.10.1990 தேதியன்று நடந்த ஆலோசனையின்போது முனைவு குழுவானது பொருட்களைப் பெற்றுக்கொண்ட பிறகு ஒரு வாரத்திற்குள்ளாக 100% கட்டணத்தையும் செலுத்துவதற்கான நிபந்தனைக்கு நாங்கள் உடன்படுகிறோம்.

4. கட்டணம் செலுத்த காலதாமதமானால் ஒவ்வொரு காலதாமதத்திற்கும் 24% வட்டி வசூலிக்கப்படும்.

5. இரண்டாயிரம் பி.ஜி. டிராக்ஸ் ஸ்லீப்பர்களை உடனடியாக வழங்குவதாகவும், தங்கள் விருப்பத்தின் பேரில் அவற்றை தாங்கள் விரும்புவது போல அவற்றை வழங்குவதாகவும்

6. நாங்கள் இந்திய ரயில்வேக்கு தொடர்ந்து ஸ்லீப்பர்கள் வழங்கி வருவதாகவும், வி.பி.டீ–வுடன் பரிவர்த்தனையை நீட்டிக்க விரும்புவதாகவும்

7. வங்கி உத்தரவாதத்தின் பேரில் தாங்கள் 10% பாதுகாப்பு வைப்பீடு எற்படுத்திக் கொடுப்பதாகவும், தங்களுடைய வைப்பீட்டை தங்களுக்குண்டான உத்தரவை கொடுக்காத நிலையில் தாங்கள்

செலுத்திய வைப்பீடான ரூ.75,000/–த்தை திரும்ப கொடுத்துவிட வேண்டும்."

10. அதன் பிறகு இரு தரப்பினருக்கு இடையேயும் கடித தொடர்பு இருந்துள்ளது. 20.10.1990 தேதியன்று கடைகளின் கட்டுப்பாட்டாளர் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையரின் கடைகளின் கட்டுப்பாட்டாளருக்கு அனுப்பப்பட்டு மற்றும் ஒரு கடிதத்தில் மேல்முறையீட்டாளர் தாங்கள் துறைமுக பொறுப்பு உரிமையரின் பொது கடையில் வைத்து சரக்குகளை ஆய்வு செய்ய ஒப்புக்கொள்ளவில்லை என மீண்டும் வலியுறுத்தியுள்ளார். அவ்வாறு எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையரின் பொது கடையில் வைத்து சரக்குகளை எதிர்மனுதாரர் சரக்குகளை எதிர்மனுதாரர் ஆய்வு செய்தால் மேல்முறையீட்டாளர் முந்தைய கடிதத்தில் சொல்லப்பட்டுள்ள 25% அதிக தொகைக்கு பதிலாக 24% கூடுதல் தொகை வசூலிப்போம் எனவும் குறிப்பிட்டுள்ளார். மேற்படி 20.10.1990 தேதியிட்ட கடிதத்தை எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையரும் பெற்றுள்ளார்.

11. 01.08.1990 மற்றும் 08.08.1990 மற்றும் 20.10.1990 தேதிகளிட்ட மேல்முறையீட்டாளரின் கடிதங்களில் குறிப்பிட்டுள்ள மேற்கோளுக்கு பதிலளிக்கும் விதமாக 29.10.1990 தேதியிட்ட கடிதத்தில் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள மேற்கோள் தொகைக்கு ஒப்பந்தத்தை ஏற்படுத்த துறைமுக பொறுப்பு உரிமையர் ஒப்புக்கொள்வதாகவும் கூறி கடிதம் எழுதப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் மேல்முறையீட்டாளரின் தளத்தில் வைத்தே மர ஸ்லீப்பர்களை ஆய்வு செய்ய ஒப்புக்கொண்டுள்ள போதிலும் மேல்முறையீட்டாளர் தான் மர ஸ்லீப்பர்களை எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையரின் பொது அங்காடிக்கு சாலை மார்க்கமாக அனுப்பி வைப்பதற்குண்டான போக்குவரத்து செலவை ஏற்க வேண்டுமெனவும், எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு

உரிமையரின் பொது அங்காடியில் வைத்து தான் சரக்குகளின் இறுதி ஆய்வு நடத்தப்படும் என்றும், 15.11.1990 தேதி வரையிலும் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையருக்கு மர ஸ்லீப்பர்களை அனுப்பி வைக்க வேண்டுமென கேட்டுக்கொள்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

12. 29.10.1990 தேதியிட்ட கடிதத்திற்கு அனுப்பப்பட்ட 30.10.1990 தேதியிட்ட பதில் கடிதத்தில் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையரின் கடைகளின் கட்டுப்பாட்டாளர் 29.10.1990 தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை மேல்முறையீட்டாளர் ஒப்புக்கொள்ளவில்லை என்றும் அவை மேல்முறையீட்டாளரின் ஒப்பந்தத்தின்படி அமையவில்லை என்றும் சரக்கின் விலைகள் உயர்ந்துவிட்டதால் ஒப்பந்தம் நடக்கவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

13. 30.10.1990 தேதியிட்ட மேற்படி கடிதத்தின் மூலம் மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் கொடுத்த முன் மொழிதலை நிராகரித்துவிட்டு தங்களுடைய வைப்புத் தொகையை மேல்முறையீட்டாளருக்கு திருப்பி செலுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

14. 30.10.1990 தேதியன்றே எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையரின் கடைகளின் கட்டுப்பாட்டாளர் துறைமுக பொறுப்பு உரிமையரின் தலைவரின் ஒப்புதலுக்காக ரூ.67,96,764/– மதிப்புள்ள 761 அகல சிறப்பு ரயில் பாதை ஸ்லீப்பர்கள் மற்றும் 10,596 அகல ரயில் பாதை ஸ்லீப்பர்களை மேல்முறையீட்டாளரிடமிருந்து வாங்குவதற்காக எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையரின் தலைவரின் உத்தரவுக்காக ஒரு அலுவலக குறிப்பை ஏற்படுத்தியுள்ளார். 29.10.1990 தேதியன்றே அதற்கான நோக்கம் மற்றும் விற்பனை பெறுவதற்கான உத்தரவு கடிதமும் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு

உரிமையர் மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

15. 31.10.1990 தேதியன்று ஒரு கொள்முதல் ஆணை எண். G10112690-91-ல் மேல்முறையீட்டாளருக்கு எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையரின் கடைகளின் கட்டுப்பாட்டாளர் அவர்களின் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளது. அதில் விற்பனை உத்தரவில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளின்படி மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையருக்கு 10,596 அகல ரயில் பாதை ஸ்லீப்பர்களும் 761 அகல சிறப்பு ரயில் பாதை ஸ்லீப்பர்களும் சால் மரங்களில் செய்யப்பட்டவையாக கொடுக்க வேண்டுமெனவும், விற்பனை உத்தரவில் குறிப்பிட்டுள்ள விலைக்கு கொடுக்க வேண்டுமெனவும், விற்பனை உத்தரவு மேல்முறையீட்டாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

16. மேல்முறையீட்டாளரின் 30.10.1990 தேதியிட்ட கடிதத்திற்கு பதில் கடிதமாக 12.11.1990 தேதியன்று நோக்க கடிதமும் கொள்முதல் ஆணையும் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தின் மூலம் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் மேல்முறையீட்டாளர் கொள்முதல் ஆணையில் குறிப்பிட்டுள்ள பொருட்களை கேட்கும்படியும், மேல்முறையீட்டாளர் மேற்கோள் காட்டிய தொகை செல்லுபடியாகும் கால கட்டத்திற்குள்ளாக கொள்முதல் ஆணை வழங்கப்பட்டுவிட்டதாகவும் கூறி நோக்க கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளரை கொள்முதல் ஆணையின்படி சரக்கை அனுப்பவில்லையெனில் மேல்முறையீட்டாளரின் செலவில் ஆபத்து கொள்முதல் செய்யப்பட்டு அவருடைய வைப்புத் தொகை ரூ.75,000/-மும் பிடித்தம் செய்யப்படும் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் விற்பனை உத்தரவுக்குண்டான வைப்புத் தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்தவில்லை என்பதையும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

17. 19.11.1990 தேதியிட்ட மற்றொரு கடிதத்தின் மூலம் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் சரக்குகளை அனுப்பி வைக்குமாறு மேல்முறையீட்டாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். 27.11.1990 தேதியன்று மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையருக்கு கடிதத்தின் மூலம் ஒப்பந்தம் முடிவடையவில்லை என்றும், தன்னுடைய வைப்புத் தொகையை திருப்பி கொடுக்க வேண்டுமெனவும் கேட்டு கடிதம் அனுப்பியுள்ளார்.

18. 03.09.1991 தேதியன்றோ அல்லது அதற்கு பிறகு 10 மாதங்கள் கழித்து எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் அதிகப்படியான விலையில் மர ஸ்லீப்பர்களை தங்களுக்கு வழங்குமாறு எம்/எஸ். சகோரியா மெஷின் டுல்ஸ் கார்பரேசன் என்ற நிறுவனத்திற்கு விற்பனை உத்தரவு கொடுத்துள்ளனர்.

19. எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் மேல்முறையீட்டாளரிடம் தாங்கள் கேட்ட மர ஸ்லீப்பர்களை ஒப்பந்தத்தில் மேல்முறையீட்டாளர் குறிப்பிட்ட தொகைக்கு கொடுக்க மறுத்ததால் விற்பனை உத்தரவில் உட்கூறு 16–ன்படி ஆபத்து கொள்முதல் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் மேற்கொள்ளலாம் என்றும் 31.10.1990 தேதியிட்ட கொள்முதல் ஆணையின்படி மூன்றாம் தரப்பினரிடமிருந்து மர ஸ்லீப்பர்களை எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் வாங்குவதால் தங்களுக்கு ஏற்பட்ட இழப்பீட்டை தாங்கள் கோர இயலும் என்றும், எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் விற்பனை உத்தரவில் கண்டுள்ள விற்பனை சிறப்பு நிபந்தனைகள் பிணைப்பு ஒப்பந்தம் இருப்பதாகவும் கூறியுள்ளனர்.

20. மேல்முறையீட்டாளரின் கூற்றுபடி எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் மேல்முறையீட்டாளரின் முனைவு நிபந்தனைகளை ஒப்புக்கொள்ளாததாலும், மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு

உரிமையரின் நிபந்தனைகள் மற்றும் வரையறைகளை ஏற்காததாலும் தாங்கள் இருவருக்கும் இடையே முடிவுற்ற ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றும், குறிப்பாக மேல்முறையீட்டாளரின் பொது அங்காடியில் வைத்து இறுதி ஆய்வு மேற்கொள்வது சம்மந்தமான நிபந்தனையை எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் ஏற்காததாலும் ஒப்பந்தம் முழுமையாக ஏற்கப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

21. 10.04.1992 தேதியன்றோ அல்லது அதற்கு அடுத்தபடியாக எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் விசாகப்பட்டினம் இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 106/1993–ஐ மேல்முறையீட்டாளருக்கு எதிராக ரூ.33,19,991/–ஐ வட்டியுடன் சேர்த்து இழப்பீடாக கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதில் இந்த மேல்முறையீட்டாளரும் தன்னுடைய பதிலுரையை 21.03.1994 அன்றோ அல்லது அந்த சமயத்திலோ தாக்கல் செய்துள்ளார்.

22. ஜூன் 1994–ல் அல்லது அடுத்தபடியாக மேல்முறையீட்டாளர் விசாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 450/1994–ஐ தான் செலுத்திய வைப்பீட்டுத் தொகையை 24.04.1991 முதல் 23.04.1993 வயான காலகட்டத்திற்கு எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் 24% வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டுமெனவும், செலவுத் தொகையுடன் சில தொடர்ச்சி பரிகாரங்களும் கேட்டு தாக்கல் செய்துள்ளார். அதில் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் வைப்பீட்டுத் தொகையை திரும்ப செலுத்த இயலாது என்று கூறி பதிலுரை தாக்கல் செய்துள்ளார்.

23. மேற்படி இரண்டு வழக்குகளான அசல் வழக்கு எண். 106/1993–ம் மற்றும் 450/1994–ம் ஒன்றாக இணைக்கப்பட்டு முதல் கூடுதல் மூத்த உரிமையியல் நீதிபதி, விசாகப்பட்டினம் அவர்களால் விசாரணை செய்யப்பட்டுள்ளது. முதல் வழக்கில் கீழ்கண்டவாறு எழுவினாக்கள்

விசாரணைக்காக வனையப்பட்டுள்ளன.

1. மேற்முறையீட்டாளர் ஒப்பந்தத்தை மீறியுள்ளாரா?

2. எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் பிரதிவாதியிடமிருந்து தாவா தொகையை திரும்ப பெற அருகதை உடையவரா?

3. எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையருக்கு கிடைக்கக்கூடிய பரிகாரங்கள் என்ன?

24. அசல் வழக்கு எண் 450/1994 (இரண்டாவது வழக்கு) கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. மேல்முறையீட்டாளர் கோரியுள்ளவாறு எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையரிடம் இருந்து வட்டியுடன் வைப்பீட்டுத் தொகையை பெற மேல்முறையீட்டாளர் அருகதை உடையவரா?

2. தாவா (இரண்டாவது வழக்கு) கால வரையறையால் பாதிக்கப்பட்டுள்ளதா?

3. மேல்முறையீட்டாளருக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

25. மேற்படி இரண்டு வழக்குகளும் ஒன்றாக இணைத்து விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு இரண்டு வழக்குகளில் உள்ள சிக்கல்கள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டதால் பொதுவான சாட்சியங்கள் இரு வழக்குகளிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் தரப்பில் ஒப்பந்த சமயத்தில் கடைகள் துறையில் வேலை பார்த்து வந்த வி. ஆதிநாராயணா என்பவர் எதிர்மனுதாரர் தரப்பிலும், மேல்முறையீட்டாளரின் இயக்குநரான ஸ்ரீ. ஜீ.சி. பாடியா என்பவர் மேல்முறையீட்டாளர் தரப்பில் சாட்சியாகவும்

விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

26. இரு வழக்குகளும் 31.03.2000 தேதியிட்ட பொது தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மூலம் தீர்வு காணப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் தாக்கல் செய்த வழக்கு அனுமதிக்கப்பட்டும், மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்யப்பட்ட இரண்டாவது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டும் உள்ளது.

27. இரு தரப்பினர்களின் வாதுரைகள் மற்றும் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகளையும் ஆலோசித்து விசாரணை நீதிமன்றம் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் மர ஸ்லீப்பர்களை கொடுப்பதற்கான ஒப்பந்தங்களை வரவேற்றுள்ளனர் என்றும், அதற்கு மேல்முறையீட்டாளரும் தன்னுடைய ஏல ஒப்பந்தப் புள்ளியை சமர்பித்துள்ளார் என்றும் முடிவு செய்துள்ளது.

28. விசாரணை நீதிமன்றம் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் மேல்முறையீட்டாளரின் ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டு நோக்க கடிதம் மற்றும் கொள்முதல் உத்தரவு 29.10.1990 தேதியன்று மேல்முறையீட்டாளர் குறிப்பிடப்பட்டுள்ள கால கெடுவிற்குள்ளாக கொடுத்துள்ளனர் என்றும், மேலும் மேல்முறையீட்டாளர் மேற்கோள் காட்டிய தொகையானது 31.10.1990 தேதி வரையிலும் செல்லுபடியாகக் கூடியதாகும்.

29. விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் ஒப்பந்தத்தை ரத்து செய்யப்பட்டது என்ற மேல்முறையீட்டாளரின் வாதத்தை நிராகரித்து இருவருக்கும் இடையே முடிவடைந்த ஒப்பந்தம் இருப்பதாக முடிவு செய்து 29.10.1990 தேதியிட்ட மேல்முறையீட்டாளரால் விடுக்கப்பட்ட ஒப்பந்தத்தை எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் ஏற்றுக்கொண்டபடியால் மேல்முறையீட்டாளர் மேற்கோள் காட்டிய தொகையானது செல்லுபடியாகும் நிலையில் தான் இருப்பதாகவும், 29.10.1990 தேதியன்று எதிர்மனுதாரர் துறைமுக

பொறுப்பு உரிமையர் அனுப்பிய நோக்க கடிதத்தின் மூலம் தான் ஒப்பந்தம் முடிவுக்கு வந்ததாகவும் விசாரணை நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

30. மேல்முறையீட்டாளருக்கும் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையருக்கும் இடையே முடிவடைந்த ஒப்பந்தம் இருக்கிறதா என்பது குறித்து தீர்மானிக்க 31.10.1990 தேதிக்குள்ளாக மேல்முறையீட்டாளர் சமர்பித்த ஒப்பந்தத்தை எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் ஒப்புக்கொண்டாரா என்று மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள மேற்கோள் கடிதத்தில் குறிப்பிட்ட கால கட்டத்திற்குள்ளாக ஒப்புக்கொள்ளப்பட்டதா என்பது முக்கியமான கேள்வியாகும். விசாரணை நீதிமன்றம் விற்பனை ஒப்பந்தமானது எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையரால் நோக்க கடிதமும் கொள்முதல் ஆணையயும் அனுப்பப்பட்டபோதே மேல்முறையீட்டாளரால் ஒப்பந்தம் ஏற்கப்பட்டுவிட்டது எனவும் முடிவு செய்துள்ளது.

31. மேல்முறையீட்டாளருக்கும் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையருக்கும் இடையேயான ஒப்பந்தம் முடிவுற்ற ஒப்பந்தம் என்ற முடிவுக்கு வர விசாரணை நீதிமன்றம் இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872 பிரிவு 4–ஐ நம்பியது.

4. **<u>ஒரு தெரிப்பை தெரிவித்தலானது :</u>**

ஒரு முன்மொழிவு யாருக்கு வழங்கப்படுகிறதோ அந்த நபரின் அறிவுக்கு வரும்போது அந்த தகவல்தொடர்பு நிறைவடைகிறது.

<u>ஓர் ஏற்பை தெரிவித்தலானது :</u>

அது ஏற்குநரின் ஆளுகைக்கு அப்பாற்பட்டதாகும் வகையில் தெரிப்புத்தருநருக்கு அனுப்பு வழி ஒன்றில் சேர்ப்பிக்கப்படுகிறபோது தெரிப்புத்தருநருக்கு எதிராகவும், அது தெரிப்புத்தருநருக்கு தெரியவருகிறதபோது ஏற்குநருக்கு எதிராகவும் முடிவடைகிறது.

<u>பின்னறவு செய்தலை தெரிவித்தலானது :</u>

அதை செய்பவரின் ஆளுகைக்கு அப்பாற்பட்டாகும் வகையில், எந்த ஆளுக்கு அது செய்யப்படுகிறதோ, அந்த ஆளுக்கு அது அனுப்பு வழி ஒன்றில் சேர்ப்பிக்கப்படுகிறபோது, அதை செய்யும் ஆளுக்கும் எதிராகவும்,

எந்த ஆளுக்கு அது செய்யப்படுகிறதோ அந்த ஆளுக்கு அது தெரியவருகிறபோது, அந்த ஆளுக்கு எதிராகவும் முடிவடைகிறது.

32. விசாரணை நீதிமன்றமானது மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையருக்கு இடையே ஒரு ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் முடிவடைந்தது நிரூபணமானதாக கண்டறிந்து மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையருக்கு மர ஸ்லீப்பர்களை ஒப்புக்கொண்டவாறு அனுப்பவில்லையென்றே முடிவு செய்துள்ளது. ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இருந்ததாக நிரூபணமாகியுள்ள நிலையில் பிரதிவாதியானவர் அதாவது இந்த நீதிமன்றத்தின் மேல்முறையீட்டாளர் விற்பனை உத்தரவின் விதிமுறைகளின்படி சரக்குகளை வழங்கவில்லை என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் பிரதிவாதி ஒப்பந்தத்தை மீறியுள்ளார் என்றே முடிவு செய்ய இயலும். விசாரணை நீதிமன்றமும் இதன் அடிப்படையில் 31.10.1990 தேதிக்குள்ளாக நோக்க கடிதத்தையும் பெற்று ரசீதையும் ஏற்படுத்தி எதிர்மனுதாரர் ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டதாக வழக்கை நிரூபித்துள்ளனர்.

33. விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் ஏற்றக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் தன்னுடைய கடமைகளை செயல்படுத்தாமல் மீறியுள்ளதாக விசாரணை நீதிமன்றம் முடிவு செய்து அசல் வழக்கு எண் 106/1993 எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் கூறியுள்ள இழப்பீடு அவருக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்துள்ளது. எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு

உரிமையருக்கு இழப்பீடு வழங்கும்போது கீழமை நீதிமன்றம் ஒப்பந்தச் சட்டம் பிரிவு 73–ஐ கருத்தில் கொண்டுள்ளது. ஒப்பந்தச் சட்டம் பிரிவு 73–ல் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

> **"73. ஓர் ஒப்பந்தம் மீறப்பட்டிருக்கிறபோது அத்தகைய மீறுகையினால் இடறுகிற தரப்பினர், அதன் காரணமாக அவருக்கு விளைவிக்கப்பட்டதும், அத்தகைய மீறுகையிலிருந்து காரியங்களின் வழக்கமான போக்கில் இயல்பாக உண்டாக்கியதும் அல்லது அவர் ஒப்பந்தம் செய்து கொண்டபோது அதன் மீறுகையினால் பெரும்பாலும் விளையக்கூடும் என தரப்பினர்கள் அறிந்திருந்ததுமான இழப்பீடு அல்லது சேதம் எதற்கும் அந்த ஒப்பந்தத்தை மீறியிருக்கிற தரப்பினரிடமிருந்து இழப்பீடு பெறுவதற்கு உரிமையுடையவர் ஆவார்.**

34. விசாரணை நீதிமன்றம் சரக்குகளை வழங்கக்கூடிய ஒப்பந்தத்தை மீறும்போது துறைமுகம் ஒப்பந்த தொகைக்கும் சரக்குகள் வழங்கப்படக்கூடிய இடத்தில் இருக்கும் அத்தகைய சரக்குகளின் சந்தை மதிப்பிற்கும் இடையேயான வேறுபாட்டுத் தொகையை இழப்பீடாக கோரலாம் என்று முடிவு செய்துள்ளது. அருகாமையில் உள்ள இடத்தில் சந்தை மதிப்பு இல்லாத நிலையில் கட்டுப்பாட்டு சந்தையில் இருக்கும் மதிப்பைக் கொண்டு முடிவு செய்யலாம் என்றும் கூறியுள்ளது.

35. விசாரணை நீதிமன்றம் ராஜஸ்தான் அரசு மின்சார வாரியம் மற்றும் பலர் எதிர் தயாள் வுட் வொர்க்ஸ்; ஃபட்டே சந்த் எதிர் பால்கிஷன் தாஸ்; ஜி.எம்.டி.எ.பி. கூட்டுறவு மார்கெட்ஸ் லிமிடேட் எதிர் துணைபதிவாளர் கூட்டுறவு சங்கங்கள், ராய்ச்சூர்; மாரிமுத்து கவுண்டர் எதிர் ராமசாமி கவுண்டர் மற்றும் பலர் ஆகிய மேல்முறையீட்டாளரால் முன் வைக்கப்பட்ட முன் தீர்ப்புகளையும் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரியைரால் முன் வைக்கப்பட்ட எ.கே.எ.எஸ். ஜமால் எதிர் மூலா தாவூத் சன்ஸ் & கோ; எம் / எஸ். சரயா டிஸ்டிலரி, சர்தார்பக்கர்

எதிர் யூனியன் ஆப் இந்தியா மற்றும் ஒருவர்; முரளிதர் சிரன்ஜிலால் எதிர் எம்/எஸ். ஹரிஷ்சந்தரா துவாரகாதாஸ் மற்றும் ஒருவர்; மஹாராஷ்டிரா அரசு மற்றும் ஒருவர் எதிர் திகம்பர் பால்வன்ட் குல்கர்னி ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரைகளையும் கருத்தில் கொண்டுள்ளது.

36. தி/ள். சரயா டிஸ்டிலரி, சர்தார்பக்கர் எதிர் யூனியன் ஆப் இந்தியா மற்றும் ஒருவர் என்ற வழக்கில் டெல்லி உயர் நீதிமன்றத்தின் நீதியர் ஈராயத்தின் (Division Bench) தீர்ப்பின் அடிப்படையில் விசாரணை நீதிமன்றம் அனைத்து உண்மையான மீண்டும் வாங்குதலுக்குண்டான ஆதாரமானது இழப்பீடு கோரும்போது தேவையில்லாதது என்றும் முடிவு செய்துள்ளது.

37. விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளரால் மூன்றாம் தரப்பினரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கு ஏற்பட்ட காலதாமதத்தை எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட அலுவலர் என்றும், ஒரு தனிப்பட்ட நபர் அல்ல என்பதால் மூன்றாம் நபரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்குண்டான விதிகள் நடைமுறைகளை பின்பற்றவில்லை என்ற வாதத்தை நிராகரித்துள்ளது.

38. விசாரணை நீதிமன்றம் ஒப்பந்தமானது அதை முழுமையாக கைவிடும் வரையிலும் அமலாக்கம் செய்யக்கூடியது என்று கண்டுள்ளது. ஒப்பந்தத்தின் விதிமுறைகளில் ஒப்பந்தம் நீக்கம் செய்யப்படுவது குறித்தும் அதன் காரணமாக வைப்பீட்டுத் தொகை திரும்ப ஒப்படைப்பது குறித்தும் ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி விதிமுறைகளில் உள்ளதுபோல இருக்க வேண்டுமென்றும் கூறியுள்ளது.

39. ராஜஸ்தான் அரசு மின்சார வாரியம் மற்றும் பலர் எதிர் தயாள் வுட் வொர்க்ஸ் என்ற வழக்கின் தீர்ப்பில் விசாரணை நீதிமன்றமும் மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாக உயர் நீதிமன்றம் ஸ்லீப்பர்களை

கொடுப்பதற்குண்டான ஒப்பந்தம் ஒப்புக்கொள்ளாதபோது வாதிக்கு வைப்பீட்டுத் தொகையை திரும்ப பெற உரிமையுண்டு என்றும் முடிவு செய்துள்ளது.

40. மேல்முறையீட்டாளர் தரப்பில் முன் வைக்கப்பட்ட ஃபட்டே சந்த் வழக்கில் இந்நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அடங்கிய நடுவரானது இழப்பீடு நிர்ணயிக்கும்போது நீதிமன்றமானது தண்டம் எந்த அளவிற்கு விதிக்கப்படுமோ அந்நீதிமன்றத்தின் இழப்பீடு கொடுப்பதற்கான அதிகார வரம்பையும் கருத்தில் கொண்டு வழக்கின் அனைத்து சூழ்நிலைகளையும் கருதி நியாயமான இழப்பீடு வழங்க வேண்டுமெனவும் ஒப்பந்தத்தை மீறுகின்ற வழக்கில் நீதிமன்றத்தின் அதிகாரமானது விதிக்கக்கூடிய அதிகப்படியான இழப்பீடு வழங்கும்போது தகுதியற்றதாக கருதலாம் என்றும், ஆனால் இழப்பீடு நியாயமானதாக வழங்கப்பட வேண்டுமென்றும், ஏற்கனவே நன்கு நிறுவப்பட்ட கோட்பாடுகளின்படி நீதிமன்றம் இழப்பீடு வழங்க கடமையுள்ளது என்றும், பாதிக்கப்பட்ட நபர் ஒப்பந்தத்தை மீறியதால் உண்மையிலேயே இழப்பு ஏற்பட்டிருந்தாலும் ஏற்படவில்லையெனிலும் கூட ஒப்பந்தத்தை மீறியவரிடமிருந்து இழப்பீடு பெற தகுதியுடையவர் என்றும், உண்மையான இழப்பு அல்லது சேதம் குறித்தான ஆதாரம் இல்லாதபோதிலும் கூட வழங்கப்பட்ட இழப்பீடானது பாதிப்படையாது எனவும், ஒப்பந்தத்தை ஏற்படுத்தும்போதே அதை மீறினால் இழப்பீடு வழங்க வேண்டுமென்று தரப்பினர்களுக்கு தெரிந்திருக்கும் நிலையில் சாதாரண மற்றும் இயற்கையான நடைமுறைகளின்படியே ஒப்பந்தத்தை மீறும்போது ஏற்படுத்தப்பட்ட இழப்பு மற்றும் சேதத்திற்கு சமன்படுத்த இழப்பீடு வழங்க வேண்டியது அவசியம் என்பதாலும் வழங்கிய இழப்பீடு தகுதியற்றதாகிவிடாது என்றும் கூறியுள்ளது.

"11. ..... அனைத்து வழக்கிலும் வைப்பீடு செய்யப்பட்ட தொகையை திரும்ப பெறுவதற்கு அபராதத் தொகை பெறுவதற்கான நிர்ணயிக்கப்பட்ட காலம் ஒப்பந்தத்தில் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டிருந்தால் நீதிமன்றம் நியாயமான ஒப்பந்தத்தில்

குறிப்பிட்டுள்ள தொகையை தாண்டாமல் நியாயமான ஒரு தொகையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது."

41. மேல்முறையீட்டாளரால் முன் வைக்கப்பட்ட மாரிமுத்து கவுண்டர் என்ற வழக்கில் சென்னை உயர் நீதிமன்றத்தின் டிவிசன் பெஞ்சானது அசல் சேதத்தின் ஆதாரமானது இழப்பீடு பெறுவதற்குண்டான இன்றியமையாத தகுதி கூறு என்றும், ஜி.எம்.டீ.எ.பி. கூட்டுறவு மார்கெட்ஸ் லிமிடேட் எதிர் துணைபதிவாளர் கூட்டுறவு சங்கங்கள், ராய்ச்சூர் என்ற வழக்கில் கர்நாடகா உயர்நீதிமன்றத்தின் தனி அமர்வானது ஒப்பந்தத்தில் அபராத உத்தரவு பிறப்பிக்க வழி செய்யப்பட்டிருந்த போதிலும் அரிசி வழங்குவதில் ஏற்பட்ட தவறுக்குண்டான இழப்பீடு குறித்து சரியான மதிப்பீடு இல்லாத நிலையில் அரைக்கும் முகவர் அரிசி வழங்காததற்காக அவரிடம் அபராதம் வசூலிக்க இயலாது என்றும் முடிவு செய்துள்ளது.

42. முரளிதர் சிரஞ்சிலால் என்ற வழக்கில் இந்நீதிமன்றம்,

9. இத்தகைய வழக்குகளில் இழப்பீடு குறித்து மதிப்பீடு செய்வது பற்றி இரண்டு விதிமுறைகள் நன்கு முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும், முதலாவதானது பொருளை வழங்குவதிலிருந்து ஒப்பந்தத்தை மீறியதாக நிரூபணம் செய்யப்பட்ட நபர் ஒப்பந்தம் செயல்படுத்தப்பட்டிருந்தால் அவருக்கு எவ்வளவு தொகை கிடைத்திருக்கக் கூடுமோ அதே நிலையில் அவரை வைக்க வேண்டுமென்றும், இரண்டாவதாக வாதி தனது தரப்பில் ஒப்பந்தத்தை மற்றொரு நபர் மீறியதால் ஏற்படக்கூடிய இழப்பை சரி செய்வதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளையும் செய்திருக்க வேண்டிய கடமை உடையவர் ஆகிறார் என்றும், அத்தகைய நடவடிக்கைகளை எடுத்த நிலையில் அவர் இழப்பீடு கோருவதிலிருந்து தடை செய்யப்படுகிறது (பிரிட்டிஷ் வெஸ்டிங்ஹவுஸ் மின்சார மற்றும் உற்பத்தி நிறுவனம் லிமிடெட் எதிராக லண்டனின்

நிலத்தடி மின்சார ரயில்வே நிறுவனம் [(1912) AC 673, 689]). பிரிவு 73–ல் சொல்லப்பட்டுள்ள சட்டம் மற்றும் அதற்கான விளக்கத்தின்படியும் மேற்படி இரு விதிமுறைகளும் பின்பற்றப்பட வேண்டும். கான்பூரில் ஒரு ஒப்பந்தம் செயல்படுத்தப்பட வேண்டுமானால் எதிர்மனுதாரர் கான்பூரில் தான் சரக்குகளை வாங்க கடமைப்பட்டுள்ளார் என்றும், அதனை கல்கத்தாவிற்கு அதை ஒப்பந்தம் மீறப்படும் நாளில் கல்கத்தாவிற்கு ரயிலில் சரக்குகளை அனுப்பி வைத்துவிட்டு சரக்குகளின் விலை உயர்வினால் அவருக்கு சேதம் ஏற்பட்டுவிட்டால் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள சரக்கு தொகைக்கும் ஒப்பந்தம் மீறுகின்ற நாளுக்குண்டான விலையேற்ற தொகையையும் ஒப்பீடு செய்து இழப்பு சரிகட்டப்பட வேண்டும். ஒப்பந்தம் மீறுகின்ற நாளில் எதிர்மனுதாரர் கான்பூர் மார்கெட்டில் சரக்குகள் உண்மையிலேயே வாங்காதபோதும் ஒப்பந்தம் மீறுகின்ற நாளில் கான்பூரில் நிலவிய சந்தை மதிப்பின் ஆதாரத்தைக் கொண்டு எதிர்மனுதாருக்கு இழப்பீடு பெற அருகதை உண்டு என்றும், அத்தகைய தொகையானது ஒப்பந்த தொகைக்கும் மேலாக இருந்து அதனால் இழப்பு ஏற்பட்டிருந்தால் இழப்பீடு கொடுக்கப்பட வேண்டுமென்றும், எதிர்மனுதாரர் ஒப்பந்தம் மீறப்பட்ட தேதியன்று கான்பூரில் நிலவிய தொகை குறித்தான ஆதாரத்தை சமர்பிக்க முயற்சி எடுக்காத நிலையில் அவருக்கு இழப்பீடு வழங்க இயலாது. அந்த சூழ்நிலையில் சராசரி நடைமுறையில் இயற்கையாக இழப்பீடு ஏற்பட்டதாக கருது இயலாது.

43. மஹாராஷ்டிரா அரசு மற்றும் ஒருவர் எதிர் திகம்பர் பால்வன்ட் குல்கர்னி இந்த நீதிமன்றம் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள முடிவு தேதிக்குப் பின்னிட்டு ஒப்பந்தம் ரத்து செய்யப்பட இயலாது என்று முடிவு செய்துள்ளது. ஒப்பந்தத்தின் இறுதி தேதிக்குப் பின்னிட்டும் ஒப்பந்த வேலைகளை செய்லபடுத்தாமல் நிறுத்தி வைப்பது ஒப்பந்தத்தை மீறிய செயலாகும். அந்த

சூழ்நிலையில் ஒப்பந்தத்தை மீறிய நபர் இழப்பீடு வழங்க வேண்டுமெனவும் முடிவு செய்துள்ளது.

44. எ.கே.எ.எஸ். ஜமால் எதிர் மூலா தாவூத் மகன்கள் & கோ அரசப்பேரவை ஆனது இழப்பீடு கோரும் வாதியானவர் ஒப்பந்தம் மீறப்படும் நிலையில் தனக்கு ஏற்படும் இழப்பை சரிகட்ட நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட்டு தன்னுடைய தவறினால் ஏற்பட்ட இழப்புத் தொகையை நஷ்ட ஈடாக கோர இயலாது என்று முடிவு செய்துள்ளது.

45. உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்குகளை விசாரணை நீதிமன்றம் சாட்சியம் மற்றும் வழக்கு சங்கதிகளை நன்கு ஆராய்ந்து எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் தாக்கல் செய்த வழக்கை அனுமதித்தும் மேல்முறையீட்டாளரின் வழக்கை தள்ளுபடி செய்துள்ளது என்றும் முடிவு செய்து மேல்முறையீட்டு வழக்குகளை தள்ளுபடி செய்துள்ளது.

46. உயர் நீதிமன்றத்தின் முன்னிலையில் இருதரப்பினரும் முன் வைக்கப்பட்ட வாதங்களின் அடிப்படையில் ஒப்பந்தமானது முழுமையாக ஏற்கப்பட்டுவிட்டதா இல்லையா என்பது குறித்து முடிவு செய்ய இந்நீதிமன்றம் கீழ்கண்ட மேல்முறையீட்டாளர் தரப்பில் முன் வைக்கப்பட்ட தீர்ப்புகளை கருத்தில் கொண்டுள்ளது.

1. விசாகப்பட்டினம் துறைமுகம் பொறுப்பு உரிமையர் குழு, விசாகப்பட்டினம் மற்றும் ஒருவர் எதிர் பீகார் அல்லாய் ஸ்டீல்ஸ் லிமிடெட் மற்றும் பலர்

2. ரகுநாதன் ரெட்டி எதிர் ஹைதராபாத் அரசாங்க வருவாய்த்துறை செயலாளர்

3. மகேஷ் டிரான்ஸ்போர்ட் கோ எதிர் டீ மற்றும் டி தொழிலாளர்கள் யூனியன்

4. எம்.வி. சங்கர் பட் மற்றும் ஒருவர் எதிர் க்ளவுட் பின்டோ (டி) அவரது வாரிசுகள் மற்றும் பலர்

5. ஜவஹர்லால் பர்மான் எதிர் யூனியன் ஆப் இந்தியா

6. யு.பி. ராஜ்கியா நிர்மான் நிகாம் லிமிடெட் எதிர் இந்தூர் பிரைவேட் லிமிடெட் மற்றும் பலர்

47. மேல்முறையீட்டுக்கு வந்துள்ள தீர்ப்புரை மற்றும் உத்தரவில் மேற்கண்ட தீர்ப்புகளை உயர்நீதிமன்றம் ஆலோசிக்கவில்லை. உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டாளரின் வாதமான 1963 மேஜர் போர்ட் Trust Act–ன் சரத்து 34(1)–ன்படி முந்தைய ஒப்புதல் இல்லையென்ற வாதத்தை மட்டுமே பதிவு செய்துகொண்டு செயல்படுத்தக்கூடிய ஒப்பந்தம் எதுவும் இல்லையென்று முடிவு செய்துள்ளது.

48. விசாகப்பட்டினம் துறைமுகம் பொறுப்பு உரிமையர் குழு, விசாகப்பட்டினம் மற்றும் ஒருவர் எதிர் பீகார் அல்லாய் ஸ்டீல்ஸ் லிமிடெட் மற்றும் பலர் என்ற வழக்கில் உயர்நீதிமன்றத்தின் நீதியர் ஈராயமானது:

"17. பிரிவு 34–ல் பொறுப்பு உரிமையர் குழுவினரால் ஒரு ஒப்பந்தம் எந்த வகையில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், உட்பிரிவு 3–ன்படி மேற்படி சொல்லப்பட்டுள்ள சங்கதிகளின்படி ஒப்பந்தம் ஏற்படுத்தப்படாவிட்டால் அந்த ஒப்பந்தமானது பொறுப்பு உரிமைக் குழுவிற்கு பிணைப்பு ஒப்பந்தமாகாது. எச்.எஸ். ராக்கி எதிர் புதுடில்லி முனிசிபால்ட்டி எ.ஐ.ஆர். 1962 எஸ்.சி. 554 என்ற வழக்கில் உச்சநீதிமன்றம் பிரிவு 34 உட்பிரிவு

3–ல் கூறியுள்ள தடையின்படி ஒப்பந்தமே இல்லா நிலையது மற்றும் செயல்படுத்தக்கூடியது அல்ல என்றும் முடிவு செய்துள்ளதாகவும், அந்த வழக்கில் 1911 பஞ்சாப் முனிசிபல் சட்டம் பிரிவு 47–ல் கூறியுள்ளபடி புதுடில்லி மாநகராட்சி மன்றமானது முரண் தடை செய்யப்பட்டுள்ளது சம்மந்தமாக முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

49. விசாகப்பட்டினம் துறைமுகம் பொறுப்பு உரிமையர் குழு, விசாகப்பட்டினம் மற்றும் ஒருவர் எதிர் பீகார் அல்லாய் ஸ்டீல்ஸ் லிமிடெட் மற்றும் பலர் என்ற வழக்கில் இந்த நீதிமன்றம் போக்குவரத்து மேலாளரின் கடிதத்தில் அவர் துறைமுக பொறுப்பு உரிமையரின் ஒரு பகுதியினை குத்தகைக்கு விடுவதாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதியானது பொறுப்பு உரிமைக் குழுவினருக்கு எதிராக செயல்படுத்த இயலாது மற்றும் இல்லா நிலையதான ஒரு ஒப்பந்தம் என்றும் மேஜர் போர்ட் Trust Act பிரிவு 34–ன்படி எந்த ஒப்பந்தமும் ஏற்படுத்தப்படவில்லை என்று முடிவு செய்துள்ளது.

50. ரகுநாதன் ரெட்டி எதிர் ஹைதராபாத் அரசாங்க வருவாய்த்துறை செயலாளர் மூலமாக என்ற வழக்கில் உயர்நீதிமன்றத்தின் நீதியர் ஈராயமானது

> **"8. ஒரு முனைவானது ஒப்புக்கொள்ளப்பட்டால் தான் ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். தரப்பினரை கட்டுப்படுத்தக் கூடியது என்பது நன்கு நிறுவப்பட்ட சட்டத்தின் விதிமுறை ஆகும் என்றும், ஒரு முனைவு ஒப்புக்கொள்ளப்படுவதற்கு முன்பாகவே முனைவர் அந்த முனைவை திரும்ப பெற்றாலோ அல்லது அவ்வாறு ஒப்புக்கொள்வதானது நிபந்தனைக்கு உட்பட்டோ அல்லது இறுதியானதாகவோ இருக்கும்பட்சத்தில் அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தமானது என்பதும் நன்கு நிறுவப்பட்ட ஒன்று என்றும் கூறப்பட்டுள்ளது.**

51. மகேஷ் டிரான்ஸ்போர்ட் கோ எதிர் டீ மற்றும் டி தொழிலாளர்கள் யூனியன் என்ற வழக்கில் இந்த நீதிமன்றம் தொழில் தகராறுச் சட்டம் 1947 பிரிவு 10(1)–ன்படி தொழில் தகராறின் செல்லுபடியாகும் தன்மை மற்றும் உரிமை குறித்தும் தொடர்புடைய வழக்கானது இவ்வழக்கின் பிரச்சனைகள் சம்மந்தப்பட்டதல்ல. எம்.வி. சங்கர் பட் மற்றும் ஒருவர் எதிர் க்ளவுட் பின்டோ (டி) அவரது வாரிசுகள் மற்றும் பலர் என்ற வழக்கில் இந்நீதிமன்றம் வாரிசுகள் ஒப்பந்தத்திற்கு தரப்பினராக இல்லாதபோது ஒரு உயிலின் அடிப்படையில் அந்த ஒப்பந்தமானது வாரிசுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் அது முழுமையான ஒப்பந்தமாகாது என்று கூறியுள்ளது. அந்த தீர்ப்பு இவ்வழக்கிற்கு பொருந்துகிறது என்பது குறித்தும் விளக்கப்படவில்லை.

52. யு.பி. ராஜ்கியா நிர்மான் நிகாம் லிமிடெட் எதிர் இந்தூர் பிரைவேட் லிமிடெட் மற்றும் பலர் என்ற வழக்கில் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட ஒப்பந்த அறிவிப்பானது கழக அமைப்பு விதிகளின்படி இல்லாதபோது அதை பிணைப்பு ஒப்பந்தமாக ஏற்க இயலாது என்று முடிவு செய்துள்ளது.

53. உயர்நீதிமன்றம் ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டது குறித்து எந்த பிரச்சனையும் இல்லையென்றும், எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையரின் ஒப்பந்தத்தை மேல்முறையீட்டாளர் ஒப்புக்கொண்டு 31.10.1990 தேதியன்று கொள்முதல் ஆணை பிறப்பிக்கப்பட்டு பதிவு தபாலில் அனுப்பப்பட்டு அதனை மேல்முறையீட்டாளர் மறுத்துள்ளார். உயர் நீதிமன்றமும் மேல்முறையீட்டாளரின் வாதமான மேஜர் போர்ட் டிரஸ்ட் சட்டத்தின்படி 1963–ன் பிரிவு 34(1)–ன்படி எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமைக் குழுவினரின் முன் ஒப்புதல் இல்லை என்ற வாதத்தையும் பதிவு செய்துள்ளது. உயர் நீதிமன்றம் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையரின் நோக்க கடிதமானது பொறுப்பு உரிமைக் குழுவின் ஒப்புதலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதையும் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையரின் ஒரே சாட்சியமும் ஒப்பந்தம்

முழுமையாக ஏற்கப்படவில்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளதையும் எடுத்துக்கொண்டுள்ள போதிலும் அதை உயர் நீதிமன்றம் பரிசீலிக்கவில்லை. உயர்நீதிமன்றம்

"விசாகப்பட்டினம் துறைமுக பொறுப்பு உரிமையர் வா.சா.ஆ.1–ல் ஒப்பந்தத்தின் உட்கூறு 16–ஐ முன்னிலைப்படுத்தி பொருட்கள் கொடுக்கப்படாத போது துறைமுக பொறுப்பு உரிமையருக்கு ஒப்பந்தத்தை ரத்துசெய்ய உரிமையுள்ளது என்றும் நிறுவனத்தின் வழக்கே ஒப்பந்தமே இல்லை என்பது தான் என்றும், எனவே ஒருவர் மற்றொருவரை குற்றம் சாட்டும்போது உண்மையிலேயே முழுமையுள்ள செயல்படுத்தக்கூடிய ஒப்பந்தம் இருக்கிறதா என்பது குறித்து பார்க்க வேண்டுமென்றும், வா.சா.1–ன் சாட்சியத்தின் மூலம் துறைமுக பொறுப்பு உரிமையர் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர் என்றும், வா.சா.ஆ.8–ன் மூலம் பொறுப்பு உரிமை குழுவின் ஒப்புதல் பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், தி/ள். பாடியா டிம்பர் கம்பெனி பிரைவேட் லிமிடெட்–ல் கூறியுள்ளபடி பொறுப்பு உரிமையர் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்றும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் ஒப்பந்தம் முழுமையாக செயல்படுத்தவில்லை என்பது உண்மைதான் என்று கூறியிருப்பதாகவும், அதை மட்டுமே வைத்து ஆவணங்களில் உள்ள சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளைக் கொண்டு நோக்கத்தை பிரதிபலிப்பதாக ஏற்க இயலாது என்றும், தி/ள். பாடியா டிம்பர் கம்பெனி பிரைவேட் லிமிடெட் அவர்களின் கூற்றுபடியும் 27.11.1990 தேதியிட்ட வா.சா.ஆ.10 கடிதத்தின்படியும், தி/ள். பாடியா டிம்பர் கம்பெனி பிரைவேட் லிமிடெட் 29.10.1990 தேதியிட்ட கடிதத்தை ஒப்புக்கொண்டிருப்பதாகவும், அதன்படி ஒப்பந்தம் முன்று மாத காலத்திற்கான ஒப்பந்தம் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், வா.சா.ஆ.10–ல் உள்ள கடிதத்தின் ஒப்பந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளுக்கு முரணாக, தி/ள். பாடியா டிம்பர்

கம்பெனி பிரைவேட் லிமிடெட் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இல்லையென்று முரணாக கூற இயலாது. விசாரணை நீதிமன்றம் 29.10.1990 தேதியன்று ஒப்பந்தப்புள்ளி ஒப்புக்கொள்ளப்பட்டது என்று சரியாக முடிவு செய்திருப்பதாகவும், எனவே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள மற்றும் செயல்படுத்தக்கூடிய ஒப்பந்தம் இருப்பதாக முடிவு செய்ய அதுவே போதுமானது என்றும், தி/ள். பாடியா டிம்பர் கம்பெனி பிரைவேட் லிமிடெட் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இல்லையென கூற இயலாது என்றும், பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு பார்க்கும்போது ஒப்புதலுக்குண்டான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை என்றும் ஒப்பந்தத்தை தி/ள். பாடியா டிம்பர் கம்பெனி பிரைவேட் லிமிடெட் தான் மீறியுள்ளதாகவும், எனவே விசாகப்பட்டினம் துறைமுக பொறுப்பு உரிமையர் வைப்புத் தொகையை பறிமுதல் செய்துள்ளது சரியே என்றும் கீழமை நீதிமன்றம் வாதியான விசாகப்பட்டினம் துறைமுக பொறுப்பு உரிமையர் தொகையை பெற அருகதை உடையவர் என முடிவு செய்திருப்பது சரியே என்றும், இதன் காரணமாகவே தி/ள். பாடியா டிம்பர் கம்பெனி பிரைவேட் லிமிடெட் கோரியுள்ள தொகையை திரும்ப பெறுதல் பரிகாரம் மேற்படி காரணங்களாலேயே தகுதியற்றதாகிவிட்டது என்றும், எனவே மேல்முறையீடுகளில் எந்த தகுதியும் இல்லை."

54. மேல்முறையீட்டாளரின் வாதங்கள் அனைத்தையும் நன்கு ஆராய்ந்த உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் முன் வைத்த முன் தீர்ப்புகளை விவாதிக்கவில்லை.

55. விசாரணை நீதிமன்றம் ஒப்பந்தச் சட்டம் பிரிவு 4–ஐ கருத்தில் கொண்டு பிரிவு 7–ஐ பொருட்படுத்தாமல் விட்டுள்ளது. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 1872 பிரிவு 7–ல்

"7. ஒரு தெரிப்பை ஒரு வாக்குறுதியாக மாற்றுவதற்கு அதன் ஏற்பு

1. முழுமையானதாகவும் மட்டுப்படுத்தப்படாததாகவும் இருத்தல் வேண்டும்.

2. எந்த முறையில் அந்த தெரிப்பு ஏற்கப்பட வேண்டுமென அது விதித்தாலன்றி வழக்கமானதும், தகவானதுமான ஏதாவது ஒரு முறையில் இயங்கப்படுதல் வேண்டும். அந்த தெரிப்பானது அதை இத்தகைய முறையில் ஏற்க்கப்பட வேண்டுமென்று விதித்திருந்து அத்தகைய முறையில் எந்த ஏற்பு செய்யப்படவில்லை என்றால் தெரிப்புத் தருனர் அந்த ஏற்பை அவருக்கு தெரிவிக்கப்பட்ட பிறகு ஒரு தகவான கால அளவுக்குள் வேறு முறையில் இல்லாமல் விதித்திருக்கிற முறையிலேயே ஏற்படுதல் வேண்டுமென வற்புறுத்தலாம்; ஆனால் அவர் அவ்வாறு செய்ய தவறினால் அவர் அந்த ஏற்பை ஏற்கிறவர் ஆவார்.

56. ஒப்பந்தச் சட்டத்தின் அடிப்படை கோட்பாடானது முனைவும், முனைவை ஏற்றுக்கொள்வதும் முழுமையானதாக இருக்க வேண்டும். அதில் எந்த சந்தேகத்திற்கும் இடம் இருக்கக் கூடாது. முனைவும் ஏற்றுக்கொள்ளுதலும் மூன்று கூறுகளை கொண்டதாக இருக்க வேண்டும். அவை உறுதி, அர்பணிப்பு மற்றும் தகவல் தொடர்பு. தெறிப்புத்தருணர் ஒப்பந்தத்தில் ஏற்கனவே கையொப்பமிட்டு ஒப்பந்தத்தை ஏற்கும்போது ஏற்கும் நபர் புதிய நிபந்தனை விதித்தால் அந்த நிபந்தனையை தெறிப்புத்தருணர் ஏற்கும் வரையிலும் ஒப்பந்தம் முழுமையடையாது. மாறுபாட்டுடன் கூடிய தெறிப்புத் தருதல் என்பது தெறிப்புத் தருதல் ஆகாது. அதன் விளைவு மற்றும் பொருளானது எதிர் முன் மொழிந்தவர் முன் மொழிதலை முழுமையாக ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு முன்பாகவே ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும் [பத்தி 56] [247 – B – C]. ஒப்பந்தமானது தெரிப்புத் தருநரால் நிபந்தனை ஒப்புக்கொள்ளாத நிலையில் ஒப்பந்தம் முழுமையாக ஏற்கப்பட்டதாக கருத இயலாது என ஹரித்வார் சிங் எதிர் பகுன் சும்புருயி மற்றும்

பலர் என்ற வழக்கில் இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. வேறுபாடுடன் கூடிய ஒப்பந்தமானது ஒப்புதலாக கருத இயலாது. ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு முன்பாகவே எதிர் முன் மொழிதல் பொறுப்பு உரிமையரால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

57. யூனியன் ஆப் இந்தியா எதிர் பீம்சென் வாலைதி ராம்யில் இந்நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வானது முனைவை ஒப்புக்கொள்ளுதல் என்பது முழுமையாகவோ, நிபந்தனைகளுடன் கூடியதாகவோ இருக்கலாம் என்று முடிவு செய்துள்ளது. நிபந்தனையின் பேரில் ஒப்புதல் கேட்கப்படும்போது முனைவு முழுமையான ஒப்புதல் வழங்கப்படும் வரையிலும் முனைவானது எப்போது வேண்டுமானாலும் திரும்ப பெற்றுக்கொள்ளலாம் என்று முடிவு செய்துள்ளது.

58. ஜவஹர்லால் பர்மான் எதிர் யூனியன் ஆப் இந்தியா இந்நீதிமன்றத்தில் கருத்தில்கொள்ளப்பட்ட வழக்கில் இந்நீதிமன்றம் ஒப்பந்தச் சட்டம் பிரிவு 7–ன்படி முனைவிற்கான ஒப்புதலானது முழுமையானதாகவும், தகுதியுடையதாகவும் அது நிபந்தனைகளுடன் கூடியதாக இருக்கக் கூடாது எனவும் கூறியுள்ளது. அந்த வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின்படி ஒப்புதல் கடிதத்தின் முழுமையையும் பரிசீலிக்கையில் மேல்முறையீட்டாளரின் அந்த கடிதமானது ஒப்பந்தத்தில் மாற்றம் இருப்பதாகவும், பாதுகாப்பு வைப்பீட்டை ஒப்பந்தத்திற்கு முன்பான நிபந்தனையாகவும், ஒப்பந்தந்திற்கு பின்பு ஏற்படுத்தக்கூடிய நிபந்தனையாக இல்லாமல் இருந்ததால் அது ஏற்கக்கூடியது அல்ல என்றும் முடிவு செய்யப்பட்டதாகவும் கூறியுள்ளது.

59. உயர்நீதிமன்றம் ஒப்பந்தச் சட்டம் 1872–ன் பிரிவு 7–ஐ பொருட்படுத்தவில்லை. விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் மேற்படி முக்கிய சங்கதியை பொருட்படுத்தவில்லை. எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு

உரிமையர் குழு விடுத்த ஒப்பந்தப்புள்ளிக்கு மேல்முறையீட்டாளர் தனது டெப்போவில் சரக்குகளை ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென நிபந்தனை விதித்து முனைவு கொடுத்துள்ளார். மேற்படி நிபந்தனையை எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் குழு முழுமையாக ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் குழு அதன் அறையில் சரக்குகளை இறுதியாக ஆய்வுக்கு உட்படுத்த வேண்டுமென்று நிபந்தனையுடன் ஒப்புக்கொண்டுள்ளது. அந்த நிபந்தனையை மேல்முறையீட்டாளர் ஒப்புக்கொள்ளவில்லை. எனவே ஒப்பந்தம் முழுமையடைந்ததாக கூற இயலாது. முழுமையடையாத ஒப்பந்தம் என்பதால் அதில் விதி மீறலோ மேல்முறையீட்டாளரின் செலவில் ஆபத்து கொள்முதல் குறித்தோ கேள்வி எழ இயலாது. மேல்முறையீட்டாளரின் வைப்பு நிதியானது அவருக்கு திரும்ப கொடுக்கப்பட வேண்டும். [பத்தி 59] [247 – F – H., 248 – A – B].

60. மேல்முறையீட்டாளர் ஒப்பந்தத்தை மீறவும் இல்லை. அவர் சேதங்களுக்கு பொறுப்பேற்கவில்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுவதால் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் கோரியுள்ள இழப்பீடு அல்லது நஷ்ட ஈட்டுத் தொகையானது நியாயமானதா அல்லது அதிகப்படியானதா என்பது குறித்து முடிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. உண்மையான இழப்பு சம்மந்தமான ஆதாரம் இருக்கும் சமயத்தில் தான் இழப்பீடு பரிகாரம் ஏற்கக்கூடியதாகும். மேலும் எதிர்மனுதாரர் துறைமுக பொறுப்பு உரிமையர் நஷ்டத்தை தவிர்க்க உண்டான நடவடிக்கையை எடுத்தார்களா என்பது குறித்தும் பொறுப்பு உரிமையர் குழுவின் முன் ஒப்புதல் சரக்குகளை கட்டுப்படுத்துவதற்குண்டான ஒப்பந்தத்தின் நிபந்தனை முன்னோடியா அல்லது பொறுப்பு உரிமையர் குழுவின் பிந்தைய ஒப்புதல் போதுமானதா என்பது குறித்தும் முடிவு செய்ய வேண்டியது அவசியமில்லை.

61. மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரர் பொறுப்பு உரிமையரிடம் வைப்பீடு செய்துள்ள வைப்பீட்டுத் தொகையை திரும்ப பெற அருகதை உடையவர் ஆகிறாரா. வைப்பீட்டுத் தொகையை நான்கு வாரங்களுக்குள்ளாக வருடத்திற்கு 6% வட்டியிட்டு அசல் வழக்கு எண்.450/1994 தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை திரும்ப கிடைக்கும் தேதி வரையிலும் வட்டியிட்டு திரும்ப செலுத்தப்பட வேண்டும்.

62. இவ்வாறாக இம்மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் உத்தரவும் அசல் வழக்கு எண்.106/1993 மற்றும் அசல் வழக்கு எண்.450/1994–ல் கீழமை நீதிமன்றத்தின் பொது தீர்ப்பு மற்றும் உத்தரவுகளும் ரத்து செய்யப்படுகின்றன. செலவுத் தொகை குறித்து எந்த உத்தரவும் இல்லை.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்.